





புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








புதன் ❖ செப்டம்பர். 14, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 336 ❖ ரூ.10


"சில துறைகளில் அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் ஒருங்கிணைப்பு இல்லை"

# அதிருப்தி

## "சில திட்டங்களை அறிவிக்கிறோம். அதனை நடைமுறைப்படுத்துவதில் தேவையற்ற காலதாமதம் தவிர்க்கப்பட்ட வேண்டும். சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் என்பது உண்மைதான். அதற்காக சிந்தித்துக் கொண்டே இருந்து விடக் கூடாது:முதல்வர்




சென்னை, செப். 14:

"குறிப்பிட்ட சில அரசுத் துறைகளின் செயல்பாடுகள் பொது வெளியிலும், சமூக ஊடகங்களாலும் விமர்சனம் செய்யப்பட்டது. அரசு துறைகளின் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட வகையில் சிறப்பாக செயல்பட வேண்டும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை கலைவாணர் அரங்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அரசு துறைச் செயலாளர்கள் ஆய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில், முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசும்போது, பெயர் குறிப்பிடாமல் சில துறைகளின் மீது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

அது குறித்து அவர் பேசும்போது, "சில திட்டங்களை அறிவிக்கிறோம். ஆனால், அதனை நடைமுறைப்படுத்துவதில் தேவையற்ற காலதாமதம் ஆகிறது. இத்தகைய காலதாமதம் தவிர்க்கப்பட்ட வேண்டும். சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் என்பது உண்மைதான். அதற்காக சிந்தித்துக் கொண்டே இருந்து விடக் கூடாது.

நிதிநெருக்கடியில் நாம் இருக்கிறோம் என்பது உண்மைதான். எனவே, எந்த திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவமும், முன்னுரிமையும் தர வேண்டுமோ அந்தத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை விரைந்து வழங்கி அவற்றை செயலாக்கத்திற்கு கொண்டு வரவேண்டும்.

எத்தனையோ திட்டங்களைத் தீட்டினாலும், முதல்வரால் மற்றும் அமைச்சர்களால் அறிவிக்கப்படும் திட்டங்கள் அதிகமான கவனத்தைப் பெறும். அது இயற்கைதான். அப்படி கவனம் பெறும் திட்டங்களை உரிய காலத்தில் செயல்படுத்தி முடித்தாக வேண்டும்.

குறிப்பிட்ட சில அரசுத் துறைகளின் செயல்பாடுகள் பொது வெளியிலும், சமூக ஊடகங்களாலும் விமர்சனம் செய்யப்பட்டது.இவற்றில் துறைச் செயலாளர்கள் இதுபோன்ற இனங்களில் மிகுந்த கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட வகையில் சிறப்பாக செயல்பட வேண்டும்.

துறை ரீதியாக நான் உங்களோடு நேரடி தொடர்பில் இருக்கிறேன். அமைச்சர்கள் இருக்கிறார்கள். முதல்வர் அலுவலகமும் உங்களோடு தொடர்பில் இருக்கிறது. சிறந்த ஒருங்கிணைப்பு இருக்கிறது. இதே போன்ற ஒருங்கிணைந்த செயல்பாடு உங்களுக்கும், உங்களுக்கு கீழேயுள்ள அதிகாரிகளுக்கும் இருக்கிறதா என்றால் ஒருசில துறைகளில் இல்லை.

அமைச்சர்களுக்கும் துறை அதிகாரிகளுக்குமான ஒருங்கிணைந்த செயல்பாடு கூட சில துறைகளில், சில நேரங்களில் ஏற்படாமல் இருப்பதாகவும் நான் அறிகிறேன். இது எங்கும், எப்போதும், எந்தத் துறையிலும் எந்த சூழலிலும் ஏற்படக் கூடாது எனக் கேட்டுக் கொள்கிறேன். மக்களுக்கும், ஆட்சி நிர்வாகத்துக்குமான தொடர்பும், அவர்களது அனுபவங்களும், அனைவராலும் மதிக்க வேண்டியது என்பதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள் என நினைக்கிறேன்.

அதேபோல் மாவட்ட நிர்வாகத்துக்கும், துறைச் செயலாளர்களுக்குமான ஒருங்கிணைப்பும், ஒருங்கிணைந்த செயல்பாடும் நிச்சயம் அவசியம் ஆகும். ஆட்சியில் இருப்பவர் இடும் கட்டளையைச் செயல்படுத்துபவர்களாக மட்டுமல்லாமல், மக்கள் நலன் கருதி நீங்கள் வைத்துள்ள, உங்களது கனவுத்திட்டங்களையும், அரசுக்குச் சொல்லி, அதனையும் செயல்படுத்த நீங்கள் முனைய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர்கள்,துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட நிர்வாகம் ஆகிய நான்கும் ஒரே நேர்கோட்டில் செயல்பட்டால், நேர்கோட்டில் சென்றால்,தமிழ்நாட்டின் அனைத்துத் துறைகளும் நம்பர் ஒன் என்ற இலக்கை நிச்சயமாக அடைய முடியும்" என்றார்.

மேலும், சட்டப்பேரவையில் வெளியிட்ட அனைத்து அறிவிப்புகளுக்கான ஆணைகளும் அக்டோபர் 15-க்குள் வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது

புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது:வரலாறு






▶ சென்னை, தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் இறையன்பு தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் வடகிழக்கு பருவமழை குறித்த ஆயத்த பணிகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆய்வு கூட்டத்தில், பல்வேறு துறை அரசு செயலாளர்கள், சம்பந்தப்பட்ட துறை தலைவர்கள், ராணுவம், விமானப்படை, கப்பற்படை, கடலோர காவல் படை, இந்திய வானிலை ஆய்வு மையம், ஒன்றிய நீர்வள ஆணையம், தேசிய பேரிடர் மீட்பு படை உள்ளிட்ட ஒன்றிய அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பிரதமர் மோடிக்கு கிடைத்த பரிசு பொருட்கள் ஏலம் ஏலத்தில் கிடைக்கும் பணத்தை என்ன செய்கிறார் தெரியுமா?

புதுடெல்லி , செப். 14:

பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்ட பரிசுப்பொருட்களை ஆன்லைன் மூலம் ஏலம் விடப்படும் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கும் அரசு நிகழ்ச்சிகள் மற்றும் அரசியல் மாநாடுகளில் அவருக்கு பல்வேறு வகையான பரிசு பொருட்கள் வழங்கப்படுகிறது. அந்த பரிசு பொருட்கள் அனைத்தும் டெல்லியில் உள்ள தேசிய கலைக்கூடத்தில் சேகரித்து வைக்கப்பட்டு. பின்னர் அதனை ஏலம் விட்டு அதில் கிடைக்கும் பணத்தை மக்கள் நல திட்டங்களுக்கு பிரதமர் மோடி வழங்கி வருகிறார்.

2019 - 2021 ஆண்டு டர்பன், சால்வை, ஓவியங்கள், புகைப்படங்கள் உள்ளிட்ட பரிசு பொருட்கள் மற்றும் நினைவு சின்னங்கள் ஏலம் விடப்பட்டு அதன் மூலம் ரூ.22.5 கோடி ரூபாய் கிடைத்துள்ளதாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தெரிய வந்தது. அந்த ஏலத்தில் 2020 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் தொடரில் ஈட்டி எறிதலில் தங்கப்பதக்கம் வென்ற நீரஜ் சோப்ரா அந்த ஈட்டியை பிரதமர் மோடிக்கு பரிசாக வழங்கினார் . கடந்த ஆண்டு விடப்பட்ட ஏலத்தில் நிரஜ் சோப்ரா வழங்கிய ஈட்டி சுமார் ரூ.1.50 கோடி ரூபாய்க்கு ஏலம் போனது. மேலும் இந்த ஏலாத்தின்



மூலம் கிடைக்கும் பணத்தை கங்கை நதியை சுத்தம் செய்ய வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தாண்டு சுமார் 1,200 பொருட்களை ஏலம் விட திட்டமிடப்பட்டுள்ளது. www.pmmementos.gov.in. என்ற இணையதளத்தில் நடைபெறும் இந்த ஏலம் செப்டம்பர் 17ஆம் தேதி முதல் அக்டோம்பர் 2ஆம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏலத்தில் பொருட்களின் ஆரம்ப விலை ரூ.100 முதல் ரூ.10 லட்சம் வரை நிர்ணயக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு வீரர்கள் பிரதமர் மோடிக்கு வழங்கிய பரிசு பொருட்கள் உத்தர பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் வழங்கிய அனுமன் சிலை, ஆந்திர முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி வழங்கிய வெங்கடேச பெருமாள் சாமி சிலை, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் வழங்கிய மகாலட்சுமி சிலை மற்றும் சால்வை, துண்டு உள்ளிட்ட ஏராளமான பரிசு பொருட்கள் இந்த ஏலத்தில் விடப்படுகிறது.

### கறம்பக்குடி அருகே அரசு பள்ளி ஆசிரியையை பள்ளிக்குள் புகுந்து தாக்கிய நபரால் பரபரப்பு

கறம்பக்குடி , செப். 14:

கறம்பக்குடி அருகே அரசு பள்ளி ஆசிரியை மீது பள்ளிக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய நபரிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா கணியன்கொள்ளை அரசு தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணியாற்றி வருபவர் வடக்கு வானக்கன்காட்டை சேர்ந்த சித்ராதேவி இவர் வழக்கம் போல் நேற்று பள்ளிக்குச் சென்று மாணவர்களுக்கு



பாடம் நடத்திக் கொண்டிருந்தபோது அதே கிராமத்தைச் சேர்ந்த சித்ராதேவியின் உறவினர் ஒருவர் சொத்து தகராறு காரணமாக ஆசிரியையிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் தொடர்ந்து இருவரும் ஒருவரை ஒருவர் ஒருமையில் பேசிக்கொண்டனர்.

இவை அனைத்தையும் வகுப்பறையில் இருந்த மாணவ மாணவிகள் பார்த்துக் கொண்டே என்ன செய்வது என்று தெரியாமல் தவித்து வந்தனர் ஒரு கட்டத்தில் ஆசிரியையான சித்ரா தேவி மீது தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதல் நடத்தியவர் மீது சித்ரா தேவியும் பதிலுக்கு தாக்குதல் நடத்தி அவரை தள்ளிவிடும் பதிவுகள் அடங்கிய வீடியோ வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதனை சற்றும் எதிர்பாராத சக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். சம்பவம் குறித்து தகவல் அறிந்த வடகாடு போலீசார் பள்ளியில் விசாரணை மேற்கொண்டனர்.

முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, சி.விஜயபாஸ்கர்

## தொடர்புடைய இடங்களில் லஞ்ச ஒழிப்புத் துறை சோதனை– ரூ.48 லட்சம் பறிமுதல்

சென்னை, செப். 14:

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தொடர்புடைய இடங்களில் ரூ.32.08 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக லஞ்ச ஒழிப்புத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிமுக ஆட்சியின்போது, கிராமப்புறங்களில் உள்ள தெருவிளக்குகளை எல்இடி விளக்குகளாக மாற்றும் திட்டத்தில் அரசுக்கு ரூ.500 கோடி இழப்பை ஏற்படுத்தியதாக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி மற்றும் அவருக்கு நெருக்கமானவர்களுக்கான இடங்கள் என மாநிலம் முழுவதும் மொத்தம் 26 இடங்களில் லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் நேற்று காலை முதல் சோதனை நடத்தினர்.




இந்தச் சோதனையில் ரூ.32.08 லட்சம் ரொக்கம், 1,228 கிராம் தங்கம், 348 கிராம் வெள்ளி மற்றும் 10 நான்கு சக்கர வாகனங்கள், வழக்கில் தொடர்புடைய 315 ஆவணங்கள், 2 வங்கி பெட்டக சாவிகள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளதாக லஞ்ச ஒழிப்புத் துறை சார்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனிடையே, முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் தொடர்புடைய இடங்களில் நடத்தப்பட்ட சோதனையில் ரூ.18.37 லட்சம் பணம், 1,872 கிராம் தங்கம், 8.28 கிலோ வெள்ளி கண்டறியப்பட்டது. மேலும், வழக்கில் தொடர்புடைய 120 ஆவணங்கள், 1 சிடி, 1 பென்டிரைவ், 2 ஐபோன்கள், 4 வங்கிப் பெட்டக சாவிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக லஞ்ச ஒழிப்புத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை மஞ்சக்கரனை பகுதியில் தனியார் மருத்துவக் கல்லூரியின் புதிய மருத்துவமனைக்கு விதிமுறைகளுக்கு மாறாக சான்றிதழ் வழங்கியதாக எழுந்த புகாரின் அடிப்படையில் இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்











| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,725 | Rs.5,127 |

# ஜெயங்கொண்டத்தில் ஆசிரியர்களுக்கு அறிவுச்சுடர் விருது வழங்கும் விழா



அரியலூர், செப்.14–

ஜெயங்கொண்டத்தில் ஆசிரியர்களுக்கு அறிவு சுடர் விருது வழங்கும் விழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் கல்வி மாவட்ட அளவில், ஆசிரியர் பணி செய்து வரும் ஆசிரியர்களை பாராட்டி, ஜெயங்கொண்டம் சோழன் சிட்டி லயன்ஸ் சங்கம் சார்பில், அறிவுச்சுடர் விருது வழங்கும் விழா நடைபெற்றது.

ஜெயங்கொண்டம் விஜயா மஹால் அரங்கத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு, ஜெயங்கொண்டம் சோழன் சிட்டி லயன்ஸ் சங்கத்தின் தலைவர் வினோத் குமார் ஜெயின் தலைமை வகித்தார்.

மாவட்ட தலைவர் கே. ராஜன் வரவேற்று பேசினார், சாசன தலைவர் கருப்பையா, மாவட்டத் தலைவர்கள் ரமேஷ்குமார்,ம.கல்யாண குமார் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர், சௌடாம்பிகா கல்வி குழுமத்தின் தலைவரும், லயன்ஸ் சங்க மாவட்டத் தலைவருமான எஸ். ராமமூர்த்தி சிறப்பு விருந்தினராக பங்கேற்ற இவ்விழாவில், ஆசிரியர்களுக்கான விருதுகளை வழங்கி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் சிறப்புரையாற்றினார்.

அரியலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொறுப்பு) மான்விழி, ஆசிரியர்களுக்கான நற்சான்றிதழை வழங்கி பேசினார், உடையார் பாளையம்மாவட்டகல்வி அலுவலர் ஜோதிமணி, ஆசிரியர்களுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்தி பேசினார், விழாவில் கணேசன்,முருகானந்தம், ரவிச்சந்திரன், அலெக்சாண்டர், சி.பி. ராஜா, ஜி ராமசாமி, ஐயப்பன்உள்ளிட்ட,லயன் சங்க நிர்வாகிகள், பள்ளி ஆசிரிய, ஆசிரியைகள் உள்பட, பலர் பங்கேற்றனர், முடிவில் ஜெயங்கொண்டம் சோழன் சிட்டி லயன்ஸ் சங்க பொருளாளர் உதயகுமார் நன்றி கூறினார்.

# அரியலூரில் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் தொமுச நிர்வாகிகள் ஆர்ப்பாட்டம்



அரியலூர், செப்.14–


அரியலூரில் சிவில் சப்ளை கார்ப்பரேஷன், தொமுச நிர்வாகிகளின் கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அரியலூர் பல்துறை அலுவலக வளாகத்தில் உள்ள, தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் அலுவலகம் முன்பு, தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை சார்பில் நடைபெற்ற, கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டத்திற்கு, சங்கத்தின் அரியலூர் மண்டல தலைவர் எஸ். நாராயணன் தலைமை வகித்தார், மண்டல செயலாளர் பி .அய்யாதுரை வரவேற்றுப் பேசினார்.

கூட்டுறவு துறையினரை மண்டல மேலாளர்களாகநியமனம் செய்வதை, தமிழக அரசும் தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் நிர்வாகமும், திரும்ப பெற வேண்டும். நவீன அரிசி ஆலைகளை தனியார் மயமாக்க கூடாது. டிபிசிகளில் மூவ்மெண்ட் செய்யாது, இழப்பை ஊழியர்களிடம் பணம் பிடித்தம் செய்வதை கைவிட வேண்டும். ஒப்பந்தம் மூலம் சுமை தூக்குவோரை நியமிப்பதை, உடனடியாக நிறுத்திட வேண்டும். காலி பணியிடங்களை, 12(3) ஒப்பந்தப்படி நிரப்பிட வேண்டும். சுமை தூக்குவோருக்கு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்தல் வேண்டும்.

உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், சங்கத்தின் பொருளாளர் ராமகிருஷ்ணன், துணை செயலாளர்கள் சசிகுமார், பாலன், முனியமுத்து, பழனியப்பன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர், 13-ம் தேதி முதல் 19ஆம் தேதி வரை ஒரு வார காலம் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தொமுச மண்டலத் தலைவர் எஸ். நாராயணன் கூறியுள்ளார்.

# திருமயம் பகுதியில் இன்று மின்தடை மின்வாரியம் தகவல்



திருமயம் செப்-14

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் மின்நிலையத்தில் இன்று மாதாந்திர பராமரிப்பு பணி நடைபெற உள்ளாதல் சுற்று வட்டார பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என உதவி செயற்பொறியாளர் கா.ராமநாதன் தெரிவித்துள்ளார்.

திருமயம் மின்நிலையத்தில் இன்று பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது. இதனால் இராயவரம் மின்பாதை, திருமயம், மணவாளன் கரை, இளஞ்சாவூர், ராமச்சந்திரபுரம், கண்ணங்காரக்குடி, ஊனையூர், சவேரியார் புரம், கோனாபட்டு மின் பாதை, குளத்துப்பட்டி, பட்டணம், மலைக்குடிப்பட்டி, மாவூர், கோனாபட்டு, தேத்தாம்பட்டி, ராங்கியம் மின்பாதை, வாரியபட்டி, கொள்ளகாட்டுப்பட்டி, ராங்கியம், கண்ணனூர், விராச்சிலை மின்பாதை, மேலூர் ,அம்மன்பட்டி, அரசம்பட்டி, விலட்சுமிபுரம், ஏனபட்டி, பெல் நிறுவனம் மின் பாதை ஆகிய இடங்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின் விநியோகம் இருக்காது என உதவி செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

# ஆவுடையார்கோவிலில் தற்கொலைத்தடுப்பு குறித்து உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி



ஆவுடையார்கோவில், செப்.14–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று காலை 10 மணி அளவில் தற்கொலை தடுப்பு குறித்துவிழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

ஆவுடையார் கோவில் ஆரம்ப சுகாதார நிலையத்தில்செப்டம்பர் 10 தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு சம்பந்தமாக உறுதி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சுகாதார நிலைய மருத்துவ அதிகாரி மற்றும் மனநல மருத்துவ அதிகாரி முத்தமிழ் செல்வி,தலைமையில் மன அழுத்தம்,தற்கொலை ஏற்படுவதற்கான காரணம்,அதை தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அதற்குண்டான சிகிச்சைகள், தற்கொலை தடுப்பு நடவடிக்கைகள் போன்றவை சம்பந்தமாக உறுதி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் ஸ்கார்ப் இந்தியா களப்பணியாளர் அம்பிகா மற்றும் சுகாதார செவிலியர்கள்,சுகாதார உதவியாளர்கள் பாலகுமார் மற்றும் ரம்யாஆகியோர் கலந்து கொண்டு செப்டம்பர் 10 மனநல தற்கொலை தடுப்பு சம்பந்தமான நிகழ்ச்சி நடைபெற்றது, இதில் 50-க்கும் மேற்பட்ட பெண்களும் ஆண்களும் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சிறப்பு ஒன்றிய குழு கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு ஒன்றிய குழு தலைவர் கமல் ஜோதி தேவேந்திரன் தலைமை தாங்கினார் ஆணையர் இளங்கோவன் துணைத் தலைவர் உஷா நந்தினி பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் மேலாளர் சுலோச்சனா வரவேற்று பேசினார். கூட்டத்தில் தமிழக அரசு உத்தரவிற்கிணங்க ஒன்றிய குழு தலைவருக்கு வாகனம் வாங்குவதற்கான சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது பல்லூர் உறுப்பினர்கள் தங்கள் பகுதியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என ஒன்று குழு தலைவரிடம் கோரிக்கை விடுத்தனர் இந்த கூட்டத்தில் ஒன்றிய பொறியாளர்கள் கலையரசன் சிவக்குமார் தெய்வானை மேலாளர் செல்ல முத்துக்குமார் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பணி மேற்பார்வையாளர்கள் ஒன்றிய உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

### கடையநல்லூர் அரசு ஆண்கள் பள்ளியில்

# +2–மாணவர்களுக்கு 110 இலவச மிதிவண்டி வழங்கும் விழா



கடையநல்லூர், செப்.14–

தென்காசிமாவட்டம்- கடையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் +2-மாணவர்களுக்கு 110 விலையில்லா இருசக்கர மிதிவண்டி இலவசமாக வழங்கப்பட்டது. இதில் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் மா. செல்லத்துரை தலைமையில், கடையநல்லூர் திமுக நகரச் செயலாளர் எஸ். அப்பாஸ் முன்னிலையில், விலையில்லா சைக்கிள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் நகர்மன்ற உறுப்பினர்கள் 10-வது வார்டு ரா. முருகன் 11- வது வார்டு முகைதீன் கனி, 13 -வது வார்டு திவான் மைதீன், கடையநல்லூர் ஊராட்சி மன்றத்துணைத்தலைவர் ஐவேந்திரன் தினேஷ், பொறியாளர் அணி கருப்பணன், வலசை மதி, 1-வது வார்டு திமுக செயலாளர் காளிமுத்து, மஜித், வஹாப், மைதீன்,பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் கிருஷ்ணாபுரம் வழக்கறிஞர் ரமேஷ், சொக்கம்பட்டி சுந்தர், கடையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் மங்களாத் துரை, தமிழ் ஆசிரியர் சண்முகசுந்தரம், உதவி தலைமை ஆசிரியர் ராஜன், ஜெயசித்ரா, அமராவதி, மற்றும் ஆசிரிய பெருமக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். மேலும் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் செல்லத்துரை கடையநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்ற மாணவன் என்பதை பசுமையான நினைவுகளை பள்ளி மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.



புதுக்கோட்டை மகாராணி ரோட்டரி சங்க சிறப்பு கூட்டம் சங்கீதாஹோட்டல் கூட்ட அரங்கில் தலைவர் லெட்சுமி அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது, செயலாளர் கலாகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார் நிகழ்ச்சியில் ரோட்டரி மாவட்ட துணை ஆளுநர் சினேகா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மகாராணி ரோட்டரியின் சேவை திட்டங்கள், அதன் நோக்கம் குறித்தும் செயல்படுத்துவது பற்றியும் கூட்டங்களில் நிர்வாகிகள்,உறுப்பினர்கள் அதிகஅளவில் கலந்துகொள்ள வேண்டும் எனவும் விரிவாக பேசினார்.நிர்வாகிகள்,உறுப்பினர்கள் கல்வியாளர்கள் அஞ்சலிதேவி கமலா,கருணைசெல்வி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை செந்துரான் பொறியியல் கல்லூரியில் மாணவர்களுக்கான மதிப்பு கூட்டு திறன் பயிற்சி



புதுக்கோட்டை, செப்.14–

புதுக்கோட்டை மாவட்டம் லெணா விலக்கில் அமைந்துள்ள செந்துரான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் நான்கு தினங்களுக்கு இரண்டாமாண்டு, மற்றும் மூன்றாம் ஆண்டு அமைப்பியல் துறை, இயந்திரவியல்துறையைச் சேர்ந்த பொறியியல் மாணவர்களுக்கு மதிப்பு கூட்டு திறன் பயிற்சி முகாம் நடைபெற்றது.

புதுக்கோட்டையைச் சேர்ந்த டிசைன் புராஜெக்ட் மற்றும் 3 D பிரிண்டிங் அகாடமியின் இயக்குநர் கலைச்செல்வன் மற்றும் தலைமை பயிற்ச்சியாளர் பூபதி ராஜா ஆகியோர் இணைந்து மாணவர்களுக்கு மதிப்பு கூட்டு திறன் பயிற்சி அளித்தனர். இந்த பயிற்சியில் மாணவர்களுக்கு 3 D மாடலிங் உருவாக்குவதற்க்கான மென்பொருட்களை கற்பித்து அந்த செய்து எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் செயல் விளக்கம் மூலம் 3D பிரிண்டிங் மாதிரியை எடுத்துக் கூறினார்.

இந்த தொழில் நுட்பத்தின் மூலம் அதிக அளவிலான பொருள்களை தரமாகவும் துல்லியமாகவும் வடிவமைக்க3Dபிரிண்டிங் தொழில்நுட்பம் மிகவும் பயனுள்ளதாக இருக்குமென்றும் மேலும் குறைந்த செலவில் அதிக அளவுள்ள பொருள்களை வடிவமைக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. 3 D பிரிண்டிங் தொழில்நுட்பம் பெரும்பாலான தொழிற்சாலைகளில் கொண்டுவரப்பட்டால் மனித ஆற்றல் குறைவதோடு பொருள்களின் விலையும் குறைய வாய்ப்பிருக்கிறது. அதே போல் மாணவர்களுக்கு இந்த திறன் பயிற்சியின் மூலம் தொழில் நுட்ப நிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்பு பற்றிய விழிப்புணர்வை எடுத்துரைத்தனர். இந்த பயிற்சியில் கலந்து கொண்ட மாணவர்கள் அனைவருக்கும் கல்லூரியின் முதன்மைச் செயல் அதிகாரி ஏ.வி.எம். எஸ். கார்த்திக், மற்றும் டிசைன் புராஜெக்ட் மற்றும் 3D பிரிண்டிங் அகாடமியின் இயக்குநர் கலைச்செல்வன் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கினர்.

பயிற்சியின் நிறைவில் கல்லூரியின் தலைவர் ஏ.வி.எம். செல்வராஜ், துணைத் தலைவர் நடராஜன், மேலாண்மை இயக்குநர் ஆர். வயிரவன், நிர்வாக இயக்குநர் எம். பாண்டிகிருஷ்ணன், செயலாளர் டி. தியாகராஜன், முதன்மைச் செயல் அலுவலர் ஏ.வி.எம்.எஸ். கார்த்திக், கல்லூரியின் முதல்வர் கே. கணேஷ் பாபு, இயந்திரவியல் மற்றும் அமைப்பியல் துறையின் தலைவர்கள் கலந்து கொண்டனர், பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் இயந்திரவியல் துறையின் இணைப்பேராசிரியர் தினேஸ்குமார் செய்திருந்தார்.

# புதுக்கோட்டை கற்பக விநாயகா பள்ளியில் மாணவர்களுக்கு முதல் உதவி பயிற்சி வகுப்பு



புதுக்கோட்டை, செப்.14–

கற்பக விநாயகா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியும், பி. வெல் மருத்துவமனையும் இணைந்து மாணவர்களுக்கான சிறப்பு முதலுதவி பாதுகாப்பு பயிற்சி பள்ளியில் நடத்தப்பட்டது.

பள்ளியின் அறங்காவலர் கவிதா சுப்பிரமணியன் வாழ்த்துரை வழங்கி துவங்கி வைத்தார், இதில் ஒன்பதாம் வகுப்பு மாணவர்கள் கலந்து கொண்டனர், பி.வெல் மருத்துவமனை மருத்துவர் கோகுல்நாத் மாணவர்கள் பாதுகாப்பு, முதலுதவி செய்வதற்கு முன்பு அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார், மேலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் பல ஆலோசனைகளை சிறப்புற விளக்கினார்.

பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது, மருத்துவமனை செவிலி நன்றியுரை கூறினார். இப்பயிற்சி மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

மகாத்மா காந்தி வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் பணி வழங்க கோரி

# கிராம மக்கள் எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் முற்றுகை போராட்டம்



ஊத்துக்கோட்டை, செப்14-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், சூளைமேனி ஊராட்சி மன்றத் தலைவராக பதவி வகித்து வருபவர் சாந்தி காளிதாஸ் ஆவார். இந்நிலையில், இந்த ஊராட்சியில் காலனி பகுதியில் 120-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வசிக்கின்றனர்.

இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் ஒரு சிலர் மட்டும் பணியாற்றி வருகின்றனர். இந்த நிலையில்,இப்பகுதியில் வசித்து வரும் ஒரு சிலருக்கு கடந்த ஒரு மாத காலமாக வேலை வழங்குவதில்லையாம்.

இது குறித்து ஊராட்சி மன்ற தலைவரிடம் முறையிட்ட போது உரிய பதில் கூறவில்லையாம். பெரியபாளையத்தில் உள்ள எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலரை சந்தித்து இது குறித்து விளக்கம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள் என்று கூறி விரட்டி அடித்தாராம்.

இந்நிலையில், நேற்று இப்பகுதியைச் சார்ந்த சுமார் 20-க்கும் மேற்பட்டோர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) ஸ்டாலினை சந்தித்து இது குறித்து முறையிட்டார்களாம்.

அதற்கு அவர் உரிய பதில் கூறாமல் ஊராட்சி மன்ற தலைவரிடம் போய் கேளுங்கள் இங்கு வந்து தொல்லை செய்யாதீர்கள் என்று தகாத வார்த்தைகளால் பேசி விரட்டி அடித்தாராம்.

இதனால் ஆற்றமடைந்த அவர்கள் வேலை உறுதி அளிப்பு திட்டத்தில் உடனடியாக பணி ஆணை வழங்க கோரி வட்டார வளர்ச்சி அலுவலக வாயிலை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர் இதனால் ஆத்திரமடைந்த வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் இருந்து வெளியேறினாராம். சுமார் ஒரு மணி நேரம் காத்திருந்த பொதுமக்கள் வட்டார வளர்ச்சி அலுவலர் வராததால் தங்களது போராட்டத்தை கைவிட்டனர்.

மேலும், நாளை காலை(இன்று)காலைவந்து மீண்டும்போராட்டத்தில் ஈடுபடுவோம்! என்று கூறிவிட்டு கலைந்து சென்று விட்டார்கள். இப்பிரச்சினையால் நேற்று மாலை வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பதட்டமும்,பரபரப்பும் நிலவியது.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ்
♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com



கடலூர் மாவட்டம் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் சட்டமன்ற பொது கணக்கு ஆய்வு குழு தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான செல்வ பெருந்தகை தலைமையில் குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர் உடன் கடலூர் மாவட்ட கலெக்டர் பாலசுப்பிரமணியம் துணைவேந்தர் கதிரேசன் பதிவாளர் சீதாராமன் மற்றும் பலர் உள்ளனர்



21வதுஜூனியர்அகில இந்திய வூசு போட்டி வி.கே. கிருஷ்ணமேனன் உள் விளையாட்டு அரங்கம் கோழிக்கோடு கேரள மாநிலத்தில் நடைபெற்றது .இதில் சென்னை மாவட்டத்தை சேர்ந்த வி. தருண்ராஜ் தேசிய அளவில் பங்கு கொண்டு வெண்கலப்பதக்கம் வென்று தமிழ்நாட்டிற்கும் சென்னை மாவட்டத்திற்கும்பெருமை சேர்த்துள்ளார். அவருக்கு பாண்டிச்சேரி மாநிலத்தின் கவர்னர் தமிழிசை சௌந்தரராஜன், புதுகைவரலாறு சென்னை பதிப்பின் தலைமை செய்தி ஆசிரியர் சு.காதர், சென்னை மாவட்ட வூசு கௌரவத் தலைவர் திரு சுரேஷ் குமார், சென்னை மாவட்ட வூசு கௌரவத் தலைவர் மனோர பூபதி, சென்னை மாவட்ட வூசு தலைவர் புல்கானி, சென்னை மாவட்ட வூசு செயலாளர் விசாகபதி ,நேதாஜி சமூக சேவை இயக்கத்தின் செயலாளர் வன்னிய ராஜன், ஆகியோர் பாராட்டி வாழ்த்துக்கள் தெரிவித்தனர்

# சீர்காழியில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பாமக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



சீர்காழி , செப்.14-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பழைய பஸ் நிலையம் அருகில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் சித்தமல்லி பழனிச்சாமி தலைமை தாங்கினார்.

பாமக மாவட்ட தலைவரும், ஒன்றிய குழு உறுப்பினருமான லண்டன் அன்பழகன், மாநில செயற்குழு உறுப்பினர் ரவிச்சந்திரன், கொள்ளிடம் மேற்கு ஒன்றிய செயலாளர் பாலதண்டாயுதம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சீர்காழி நகர செயலாளர் சின்னையன் வரவேற்பு பேசினார். ஆர்ப்பாட்டத்தில் மாநில உழவர் பேரியக்க தலைவரும், திருப்பனந்தாள் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவருமான ஆலயமணி கலந்து கொண்டு காவல்துறையை கண்டித்து கண்டன உரையாற்றினார்.

தொடர்ந்து மாதானம் பகுதியில் கோவில் திருவிழாவின் போது இளம் பெண்களை பாலியல் துன்புறுத்தல் செய்த குற்றவாளிகளை உடனே கைது செய்ய வேண்டும், பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் பொதுமக்கள் மீது போடப்பட்ட பொய் வழக்குகளை திரும்ப பெற வேண்டும், பாட்டாளி மக்கள் கட்சியில் மீது குண்டத்தடுப்பு சட்டம் போடுவது நினைக்கும் காவல்துறை கண்டித்தும், பள்ளி சிறுவர்கள் மீது போடப்பட்ட வன்கொடுமை தடுப்பு சட்டத்தை ரத்து செய்ய வேண்டும், சீர்காழி பகுதியில் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டு விற்பனையை தடுத்து நிறுத்த வேண்டும் , மாவட்ட முழுவதும் கஞ்சா, கள்ளச்சார விற்பனையை தடுக்க வேண்டும், காவல்துறையினர் ஜாதி மதம் பார்க்காமல் பணியாற்ற வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சி நிர்வாகிகள் முருகவேல், பாலு, செந்தில்குமார், இளங்கோவன், குமார், ராஜேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழக இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் காங்கை குமார் இல்ல திருமண வரவேற்பு நிகழ்ச்சி

## முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பு





ஊத்துக்கோட்டை, செப்14-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், வாணியன்சத்திரம் கிராமத்தில் அய்யா முனியப்ப செட்டியார் திருமண மண்டபத்தில் தமிழக இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் காங்கை குமாரின் சகோதரர் எம்.கௌதமன்-பி.நர்மதா தம்பதியரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இதில், முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பொதுச்செயலாளர் டாக்டர் ஏ.செல்வகுமார் எம்.பி, தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய தலைவர் பொன்குமார், காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர்கள் ஏ.ஜி.சிதம்பரம்,லயன் டி.ரமேஷ், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே.கோவிந்தராஜன், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர்,தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் வழக்கறிஞர் பிரிவு மாநில துணைத்தலைவர் வழக்கறிஞர் அருண் பிரசாத், அதிமுக மாவட்ட செயலாளர் மாதவரம் மூர்த்தி, திருவள்ளூர் கமாண்டோ பாஸ்கர், எல்லாபுரம் மத்திய ஒன்றிய திமுக செயலாளர் கோடுவெளி தங்கம் முரளி, பூண்டி ஒன்றிய திமுக செயலாளர் சந்திரசேகர்,எல்லாபுரம் எம்.குமார்,காடுவெட்டி குருவின் மகள் விருதாம்பிகை,மருமகன் மனோஜ்கிரன்,காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கும்மிடிப்பூண்டி வக்கீல் சம்பத்,வெங்கல் சிவசங்கர், வீராபுரம் தாஸ்,வெள்ளீயூர் குட்டி நாயுடு, கூட்ரோடு ஜேம்ஸ்,கன்னிகைபேர் சசிக்குமார்,கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எல்லாபுரம் ஒன்றிய முன்னாள் துணைப் பெருந்தலைவர் சம்பத், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் நந்தகோபால், கண்லூர் மதனகோபால், கோடுவெளி ஊராட்சிமன்ற துணைத்தலைவர் சரத்குமார், சின்னதிரை நடிகர் சத்யா மற்றும் பல்வேறுகட்சியைச்சேர்ந்த முக்கிய பிரமுகர்களும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும், அரசுத்துறை அதிகாரிகளும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

# திருமயம் அருகே இருசக்கர வாகனத்தில் சென்ற இளைஞர் பலி



திருமயம், செப்.14-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே உள்ள ஊனையூர் விலக்கில் சிவகங்கை மாவட்டம் தேத்தாம்பட்டி ஊரை சேர்ந்த முத்து மகன் அருண் (வயது 25 ) என்பவர் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த பொழுது, நிலைதடுமாறி கம்பத்தில் மோதியதால் வாலிபர் அருண் தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

பின்னர் சம்பவ இடத்திற்கு காவல்துறையினர் விரைந்து சென்று இறந்தவரின் உடலை கைப்பற்றி உடல்கூறு ஆய்வுக்காக திருமயம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது, இது சம்மந்தமாக காவல்துறையினர் விசாரணை செய்து வருகின்றனர்.

# திருமருகலில் நெற்பயிர்களை உரசி செல்லும் மின் கம்பிகள் சீரமைக்க விவசாயிகள் கோரிக்கை



நாகப்பட்டினம், செப்.14-

திருமருகலில் நெற்பயிர்களை உரசி செல்லும் மின் கம்பிகளை சீரமைக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாகை மாவட்டம் திருமருகல் ஊராட்சி மேலக்கரையிருப்பு பகுதியில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் குறுவை நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சுமார் 20 ஏக்கர் அளவிற்கு அறுவடை பணிகள் முடிவடைந்த நிலையில் மீதமுள்ள 30 ஏக்கர் விளை நிலங்கள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

இந்த நிலையில் திருமருகல் துணை மின் நிலையத்திலிருந்து வயல்வெளி வழியாக கட்டலாடி,கீழப்பூதனூர் பகுதிகளுக்கு செல்லும் உயர் அழுத்த மின் கம்பங்கள் சேதமடைந்து மின் கம்பிகள் நெற்பயிர்களை உரசி செல்கிறது. இதனால் அறுவடை இயந்திரங்களை கொண்டு அறுவடை செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். மேலும் விவசாயிகள் மின் கம்பிகளை கடந்து செல்ல கீழே தவழ்ந்த படி செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட மின்வாரிய துறை அதிகாரிகளிடம் பலமுறை புகார் தெரிவித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உடனடியாக ஆபத்தான நிலையில் உள்ள மின் கம்பிகளை சீரமைத்து தர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து காத்துள்ளனர்.

பெரியபாளையம் அருகே மஞ்சங்காரணை கிராமத்தில்

# வேல்ஸ் மருத்துவக் கல்லூரியில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனை





ஊத்துக்கோட்டை, செப்14-

தமிழகத்தில் நேற்று ஒரே நாளில் எஸ்.பி.வேலுமணி, விஜயபாஸ்கர் உள்ளிட்ட அதிமுக பிரமுகர்களுக்கு நெருக்கமானவர்களின் தொழிற்சாலைகள், வீடுகள் மருத்துவக்கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட 26 இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் அதிரடி சோதனை மேற்கொண்டனர்.

இந்நிலையில், திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் அருகே உள்ள மஞ்சங்காரணை ஊராட்சியில் கடந்த அதிமுக ஆட்சியில் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த விஜயபாஸ்கர் வேல்ஸ் மருத்துவக் கல்லூரிக்கு பலவேறு முறைகேடனுடன் அனுமதி வழங்கியதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதன் அடிப்படையில் நேற்று காலை சென்னை ஆலந்தூர் லஞ்ச ஒழிப்புத்துறை டிஎஸ்பி லவக்குமார் தலைமையில் இன்ஸ்பெக்டர் நாகலட்சுமி உள்ளிட்ட ஆறு பேர் கொண்ட லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் கல்லூரியில் அதிரடி சோதனை மேற்கொண்டனர்.

இந்த சோதனையால் மருத்துவக் கல்லூரிக்குள் யாரையும் அனுமதிக்கவில்லை. இந்த சோதனை நேற்று மாலை வரை தொடர்ந்து நடைபெற்று வந்தது. அப்போது பல்வேறு ஆவணங்களை லஞ்ச ஒழிப்பு போலீசார் கைப்பற்றியதாக போலீஸ் வட்டாரத்தில் கூறப்பட்டது. இப்ப பிரச்சினையால் நேற்று இப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

# இன்ஸ்டாகிராம் மூலம் பழகி 2 பேரை திருமணம் செய்த பெண்: கொலையில் முடிந்த கதை

கடலூர், செப்.14-

சமூக வலைத்தளம் மூலம் பழகி இரண்டு பேரை திருமணம் செய்த பெண்ணால், ஆட்டோ டிரைவர் வெட்டி கொலை செய்யப்பட்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகேயுள்ள தட்டாஞ்சாவடி பகுதியை சேர்ந்தவர் ஆட்டோ டிரைவரான சக்திவேல் (32). இவர் கடந்த சிலநாட்களுக்கு முன்பு அரிவாளால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார்.

இது குறித்து புதுப்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். இந்த கொலை வழக்கு தொடர்பாக அதே ஊரை சேர்ந்த சுமன் (25) என்பவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சுமனும் ஆட்டோ டிரைவராக உள்ளார். இவரிடம் போலீசார் விசாரணை நடத்தியதில் திடுக்கிடும் தகவல்கள் வெளியானது. தட்டான்சாவடி பகுதியை சேர்ந்தவர் பூமிகா. இவருக்கு திருமணமாகி ஒரு குழந்தை உள்ளது.

செல்போனில் அதிகநேரம் செலவிட்டு வந்த பூமிகா சமூக வலைத்தளங்களை அதிகமாக பயன்படுத்தி வந்துள்ளார். வாட்ஸ் அப் மற்றும் பேஸ் புக் உள்ளிட்டவைகளில் தன்னுடைய போட்டோக்களை வெளியிடுவது இவரது வழக்கமாக இருந்துள்ளது. இதனால் இவரது சமூக வலைத்தளங்களை பலரும் பின்பற்ற தொடங்கியுள்ளனர். எந்த நேரமும் மனைவி செல்போனில் நேரத்தை செலவிட்டு வந்ததால் கணவன் மனைவிக்கு இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

இதனால் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால், பூமிகா தன் கணவனை பிரிந்து வாழ்ந்து வந்தார். இதனிடையே, அவரது சமூக வலைத்தளத்தை பின்தொடர்ந்து நட்பாக பழகி வந்த சுமனுக்கும், பூமிகாவுக்கும் நெருக்கம் ஏற்பட்டு இருவரும் நேரில் சந்தித்து பழகி வந்தனர். பின்னர் பூமிகா சுமனை திருமணம் செய்துகொண்டார். இதன்பின்னரும் சமூக வலைத்தளம் மூலம் பலரிடம் நட்பாக பேசி பழகி வந்துள்ளார். இரண்டாவது கணவர் சுமனுக்கு இது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக அவர் விசாரித்த போது, சுமனின் சொந்த ஊரைச் சேர்ந்த ஆட்டோ டிரைவரான சக்திவேலையும் பூமிகா திருமணம் செய்து கொண்டது தெரியவந்தது. இதனால் சக்திவேல் மீது சுமனுக்கு கோபம் ஏற்பட்டது. சக்திவேலை நேரில் சந்தித்து, உனக்கு முன்பாக நான்தான் பூமிகாவை திருமணம் செய்துகொண்டேன். எனவே அவரை விட்டு பிரிந்து செல்வதோடு பூமிகா விவகாரத்தில் இனி தலையிடக்கூடாது என மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது. பூமிகாவை விட்டு பிரிய முடியாது எனவும், முடிந்தால் அவரை அழைத்து செல் என சக்திவேல் சுமனிடம் தெரிவித்துள்ளார்.

இதில் தகராறு முற்றியதால், பேச்சு வார்த்தைக்கு வந்த சக்திவேலை, சுமன் தனது நண்பர்களோடு சேர்ந்து வெட்டிக் கொலை செய்தது விசாரணையில் தெரியவந்தது. பின்னர் கொலையில் தொடர்புடைய பண்ருட்டியை சேர்ந்த படிஸ்டா குணா, வசந்தகுமார் ஆகிய பேரையும் போலீசார் கைது செய்துள்ளனர். இந்த கொலை சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



நீலகிரி மாவட்டம், குன்னூர் பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பலர் பார்வையிட்டு, அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்து தெரிந்து கொண்டனர்.

# பெருங்களூர் அரசுப்பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி



## எம்எல்ஏ முத்துராஜா பங்கேற்பு

ஆதனக்கோட்டை, செப்.14-

புதுக்கோட்டை மாவட்டம் பெருங்களூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 237 மாணவ மாணவியர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமையாசிரியர் ராஜ்குமார் தலைமை தாங்கினார், பள்ளி மேலாண்மைக்குழுத் தலைவர் சிவரஞ்சனி முன்னிலை வகித்தார், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கல்வி அலுவலர் மஞ்சுளா ஒன்றிய கவுன்சிலர் முத்துலெட்சுமி சாமியய்யா ஊராட்சி மன்றத்தலைவர் சரண்யா ஜெய்சங்கர் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச்செயலாளர் ராமச்சந்திரன் புதுக்கோட்டை வடக்கு ஒன்றியச்செயலாளர் சாமிநாதன் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.




# மணப்பாறையில் ஏ.எம்.கோபுக்கு புகழ் அஞ்சலி



மணப்பாறை, செப்.14-

மணப்பாறை புத்தாநத்தம் சாலையில் உள்ள நகராட்சி அலுவலகம் அருகில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகரக்குழு சார்பில் விடுதலை போராட்ட வீரர் தொழிற்சங்கத் தலைவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தோழர் ஏ.எம்.கோபு பத்தாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரின் திருவுருவ படத்திற்கு மலர்துவி புகழ் அஞ்சலி செலுத்தினர்.

இப்புகழ் அஞ்சலிக்கு சி.பி.ஐ. நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன் தலைமை வகித்தார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முன்னள் மாநில நிர்வாககுழு உறுப்பினர் இந்திரஜித் போக்குவரத்துகழக மாநில துணை பொது செயலாளர் சுப்ரமணியன், நகர்மன்ற உறுப்பினர் தங்கமணி, மாவட்ட குழு உறுப்பினர்கள் பழனிச்சாமி, செளக்கத்அலி, நல்லுச்சாமி, ராஜேந்திரன் ,ரவிச்சந்திரன் உட்பட நகரக்குழு உறுப்பினர்கள் ஏ.ஐ.டி.யூ.சி நிர்வாகிகள் மலர்துவி புகழ் அஞ்சலி செலுத்தினர்.

# இந்துவாக இருக்கும் வரை நீ தீண்ட தகாதவன் திமுக எம்.பி ஆ.ராசா சர்ச்சை பேச்சுக்கு வலுக்கும் கண்டனம்



சென்னை , செப்.14-

திமுக எம்.பி ஆ.ராசாவின் இந்துக்கள் குறித்த பேச்சு தமிழக அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆ.ராசாவின் பேச்சுக்கு தமிழக பாஜகவினர் தங்களது கண்டனங்களை பதிவு செய்து வருகின்றனர். தமிழகம் தங்களுக்கு சொந்தம் என்று நினைக்கும் இந்த அரசியல் தலைவர்களின் மனநிலை மிகவும் துரதிர்ஷ்டவசமானது என ட்விட்டரில் பதிவிட்டுள்ள பாஜக தமிழக தலைவர் அண்ணாமலை, திமுகவின் ஆ.ராசா பேசிய காணொளியை பதிவு செய்துள்ளார்.

அந்த வீடியோவில் ஆ.ராசா, "இந்து மதத்தில் இருந்து வெளியேற விரும்பினால் நீதிமன்றங்கள் அனுமதிப்பதில்லை என்றார். உச்சநீதிமன்றம் என்ன சொல்கிறது. கிறிஸ்துவராக இல்லையென்றால் , இஸ்லாமியராக இல்லையென்றால் நீ இந்துவாகத் தான் இருக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் சொல்கிறது. 'இப்படிபட்ட கொடுமை வேறு எந்த நாட்டிலாவது உண்டா. எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் பேசியவர், இந்துவாக இருக்கும் வரை நீ சூத்திரன். சூத்திரனாக இருக்கும் வரை நீ விபச்சாரியின் மகன். இந்துவாக இருக்கும் வரை நீ பஞ்சமன். இந்துவாக, இருக்கும் வரை நீ தீண்ட தகாதவன். எத்தனை, பேர் விபச்சாரியின் மகனாக இருக்க விரும்புகிறீர்கள். எத்தனை பேர் தீண்டத்தகாதவனாக இருக்க விரும்புகிறீர்கள்" என்று ராசா பேசியிருக்கிறார்.

இந்த காணொளியை ட்விட்டரில் பகிர்ந்துள்ள தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, "மன்னிக்கவும், இது தமிழ்நாட்டின் அரசியல் பேச்சு நிலை. திமுக எம்.பி. மீண்டும் ஒரு சமூகத்தின் மீது வெறுப்பை உமிழ்ந்து மற்றவர்களை திருப்திப்படுத்துவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டுள்ளார். தமிழகம் தங்களுக்கு சொந்தம் என்று நினைக்கும் இந்த அரசியல் தலைவர்களின் மனநிலை மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்.

# ஆலங்குடியில் விவசாயிகள் குறைதீர்க்கும் முகாம்



ஆலங்குடி,செப்-14-

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி கோட்டத்திற்குட்பட்ட விவசாய மின் நுகர்வோருக்கான குறைதீர்க்கும் முகாம் ஆலங்குடி தபால் நிலையம் அருகில் உள்ள உதவிசெயற்பொறியாளர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டத்தின் மேற்பார்வை பொறியாளர் சேகர் தலைமையில் நடைபெற்றது, ஆலங்குடி கோட்ட செயற்பொறியாளர் நடராஜன், ஆலங்குடி நகரம் உட்கோட்ட உதவி செயற்பொறியாளர் பிருந்தாவனன், உதவி செயற்பொ றியாளர் வளர்ச்சி மதிவாணன், ஆகியோர்களது முன்னிலையில் விவசாயிகள் தங்களது குறைகளை மனுக்கள் மூலமாக வழங்கியதை பெற்றுக்கொண்டார்கள்.

அதுசமயம் ஆலங்குடி, கறம்பக்குடி, வம்பன் திருவரங்குளம் அரசடிப்பட்டி வடகாடு ஆவணம் கைகாட்டி கொத்தமங்கலம் குலமங்கலம் பனங்குளம் கீரமங்கலம் மற்றும் வெண்ணவால்குடி வேங்கிடகுளம் சம்பட்டிவிடுதி மற்றும் சுற்றுவட்டாரபகுதிகளில் இருந்து ஏராளமான விவசாயிகளும் பெண் விவசாயிகளும் தாங்களது குறைகளை குறைதீர்க்க முகாமில் எடுத்துரைத்தனர்.

முகாமில் மின்சாரம் வழங்க முடியாத விவசாயிகளுக்கு சில இடப் பிரச்சினை உள்ளவர்களுக்கும் அதற்குரிய தீர்வு விளக்கப்பட்டது மேலும் நீதிமன்றம் சம்பந்தப்பட்ட மின் விநியோகம் செய்யும்போது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வது .

மேலும் விவசாயிகளின் நலன் கருதி மின் வாரிய அலுவலர்கள் 24 மணி நேரமும் தங்குதடையின்றி விவசாயிகளுக்கு சேவை செய்வது இவைகளை தலைமை அதிகாரி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். மேலும் மாதம் மாதம் மூன்றாவது வாரத்தில் செவ்வாய்க்கிழமை சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது, மேலும் நடைபெற உள்ளது , விவசாயிகள் தங்களது குறைகளை அலுவலகத்தில் தெரிவித்து புகார் மனு கொடுக்கலாம் என நடராஜன் விவசாயிகளிடம் கூறினார், சுமார் 300க்கும் அதிகமான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

ஆலங்குடி கிராமிய உட்கோட்ட வடகாடு உபகோட்ட உதவி செயற்பொறியாளர் குமாரவேலு, ஆலங்குடி நகரம், வடக்கு உதவிமின்பொறியாளர் பிரதீபா, ஆலங்குடி மேற்கு உதவிமின்பொறியாளர் மகாதேவராஜா, வடகாடு மற்றும் கொத்தமங்கலம் உதவிமின்பொறியாளர் செல்லகணபதி, வெட்டன்விடுதி, எல்.என்.புரம் உதவிமின்பொறியாளர் ஞானசேகரன், செம்பட்டிவிடுதி உதவிமின்பொறியாளர் பாக்கியராஜன், பாச்சிக்கோட்டை உதவிமின்பொறியாளர் சத்தியமூர்த்தி வல்லத்திரக்கோட்டை உதவி மின் பொறியாளர் பிரகாஷ், திருவரங்குளம், கோவிலூர் உதவி மின் பொறியாளர் கவியரசன், மழையூர் உதவி மின் பொறியாளர் ராஜ்குமார், ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில்

# புள்ளியல்துறை மூலம் வேளாண்மை கணக்கெடுப்பு பணி அதிகாரிகளுக்கு பயிற்சி



ஆலங்குடி செப்.14-

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதா ராமு ஆணையின்படியும், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி அறிவுறுத்தலின் பேரில் பதினோராவது வேளாண்மை கணக்கெடுப்பு 2021 - 22 ம் பயிற்சியில் வேளாண்மை கணக்கெடுப்பு முக்கியத்துவம் பற்றி ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் பயிற்ச்சி நேற்று நடைபெற்றது.

இக்கணக்கெடுப்பு பயிற்சிக்கு ஆலங்குடி வட்டாட்சியர் செந்தில்நாயகி தலைமையில் நடைபெற்றது, பயிற்சியை கோட்ட புள்ளியல் உதவி இயக்குனர் ராவுத்தர் நைனா, அறந்தாங்கி கோட்ட புள்ளியில் உதவி இயக்குனர் முத்துராமலிங்கம், திருவரங்குளம் வட்டார புள்ளியியல் ஆய்வாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் இப்பயிற்சி பற்றியும் டிஜிட்டல் செயலி குறித்தும் அதிகாரிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தனர், பரப்பளவின் அடிப்படையில் சிறு குரு நடுத்தர மற்றும் பெரிய விவசாயிகள் ஆண், பெண் வாரியாகவும் சமூக அடிப்படையில் கணக்கெடுப்பு எடுக்கப்படும், வேளாண்மை கணக்கெடுப்பு எப்படி மேற்கொள்ள வேண்டும் என்றும் கூட்டத்தில் விரிவாக பேசப்பட்டது, இந்த ஆண்டு முதல் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி டிஜிட்டல் முறையில் கணக்கெடுப்பு முறையை கையாள்வது என்றும் இனிவரும் காலங்களில் விவசாயிகளுக்கான வளர்ச்சி திட்டங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

ஆலங்குடி தாலுகா அலுவலகத்தில் உள்ள மண்டல வட்டாட்சியர் பழனியப்பன் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் பாலகோபாலன் அலுவலகப் பணியாளர்கள் வருவாய் ஆய்வாளர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோர்களுக்கு விரிவான வேளாண்மை கணக்கெடுப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

# கீரமங்கலத்தில் பள்ளி செல்லா குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதாக உறுதி அளித்த அறிவொளி நகர் கிராம மக்கள்



கீரமங்கலம்,செப்.14-

புதுக்கோட்டை மாவட்டம் ,கீரமங்கலம் வடக்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் செவ்வாய்க்கிழமை பள்ளி மேலாண்மைக்குழு கூட்டம் நடைபெற்றது, கூட்டத்தில் கலந்து கொண்ட திருவரங்குளம் வட்டாரக்கல்வி அலுவலர் கருணாகரனிடம் அறிவொளி நகர் குழந்தைகள் பள்ளிக்கு வருவது குறைந்து வருவது பற்றிய தகவல் கூறப்பட்டது.

இதனையடுத்து ஒருங்கிணைந்த பள்ளிகல்வி திட்ட அலுவலர் தங்கமணி, வட்டாரக்கல்வி அலுவலர் கருணாகரன், இல்லம் தேடிக்கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனியசாமி, பள்ளி தலைமை ஆசிரியர் துரைப்பாண்டியன், பெற்றோர் ஆசிரியர்கழகத் தலைவர் ராம்குமார் மற்றும் மேலாண்மைக்குழுத் தலைவி கவிதா, சேந்தன்குடி கிராமத்தை சேர்ந்த சமூக ஆர்வலர் மரம் தங்கக்கண்ணன் உள்ளிட்டோர் அறிவொளி நகருக்கு சென்று ஆய்வு செய்த போது சுமார் 32 குழந்தைகள் பள்ளிகளில் சேர்ந்த பிறகு பள்ளி செல்லவில்லை என்பதை கண்டறிந்தனர்.

பின்னர் பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளிடம் கருத்து கேட்டனர் அப்போது சாலையை கடந்து செல்வது அச்சமாக உள்ளதால் பல குழந்தைகள் பள்ளிக்கு செல்லவில்லை என பெற்றோர்கள் கூறினார்கள், அதனையடுத்து குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்று அதிகாரிகள் வலியுறுத்திய போது குழந்தைகள் அனைவரும் பள்ளி செல்வதாக கூறினார்கள், உடனே அறிவொளி நகர் குழந்தைகள் பள்ளிக்கு சென்று வர பெற்றோர் ஆசிரியர்கழகம், பள்ளி மேலாண்மைக்குழு மூலம் வாகன வசதி ஏற்பாடு செய்வதாக உறுதி அளித்தனர்.

பெற்றோர்களும் பள்ளி வயது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதாக உறுதி கூறினார்கள்.

# பொன்னமராவதி அருகே அரசு பள்ளிக்கு முன்னாள் மாணவர்களால் தண்ணீர் டிரம் வழங்கப்பட்டது



பொன்னமராவதி, செப்.14-

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே ஆலவயல் அரசு மேல்நிலைப் பள்ளியில் வகுப்பறைகளில் தண்ணீர் இல்லாததால் மாணவ, மாணவிகள் சிரமப்பட்டு வந்தனர், இத்தகவலை பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆலவயல் ஊராட்சி மன்றத் தலைவர் சந்திரா சக்திவேலின் கவனத்திற்கு எடுத்துச் சென்றார்.

இதனை அடுத்து சந்திரா சக்திவேல் ஏற்பாட்டின்படி ஆலவயல் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் வகுப்பறைகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டது. இந்த ட்ரம்மினை தூத்தூர் காடப்பன் குடும்பத்தார்கள் மற்றும் ஆலவயல் அரசு மேல்நிலைப்பள்ளி முன்னாள் மாணவர்கள் விவேக் சேகர் ஜெயபால் ஆகியோர் வழங்கினர், இந்நிகழ்வில் ஆலவயல் ஊராட்சி மன்றத் தலைவர் சந்திரா சக்திவேல் பள்ளியின் தலைமை ஆசிரியர் நவநீதகிருஷ்ணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# கிராமப்புற மாணவர்களின் கொரோனா கால கற்றல் இடைவெளியை சரி செய்து வரும் இல்லம் தேடி கல்வி திட்டம்- பெற்றோர்கள் மகிழ்ச்சி



புதுக்கோட்டை, செப்.14-

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதா ராமு தலைமையில், புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சே.மணிவண்ணன் மற்றும் புதுக்கோட்டை மாவட்டக் கல்வி அலுவலர் மஞ்சுளா ஆகியோர் வழிகாட்டுதலின் படியும், கந்தர்வகோட்டை வட்டாரக்கல்வி அலுவலர் வெங்கடேஸ்வரி ஆலோசனையின் படியும் இல்லம் தேடி கல்வித்திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கந்தர்வகோட்டை ஒன்றிய வட்டார வளமைய இல்லம் தேடிக்கல்வி ஒருங்கிணைப்பாளர் எஸ்.கே.சுரேஷ்குமார், ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் அ. ரகமதுல்லா ஆகியோர் வேலாடிப்பட்டி, ஒத்த குடியிருப்பு, உருவம்பட்டி ஆகிய இல்லம் தேடி கல்வி மையங்களை பார்வையிட்ட போது தன்னார்வலர்கள் ரம்யா, பேபிராணி, இந்துராணி, அரங்கநாயகி, ஜோதி ஆகியோர் மையங்கள் செயல்பாட்டில் இருந்தது.

மையத்தின் செயல்பாடுகளை உற்று நோக்கி ஆலோசனை வழங்கியதாவது, மழைக்காலங்களில் மையத்தை பாதுகாப்பாக நடத்த வேண்டும் எனவும், மாணவர்களுக்கு வாசிப்பு பயிற்சி தொடர்ந்து அளிக்க வேண்டும், மாணவர்களின் வருகை பதிவை ITK செயலில் பதிவேற்ற வேண்டும் எனவும், பள்ளி செல்லா குழந்தைகளை கண்டறிந்து அவர்களை பள்ளியில் சேர்க்க வேண்டும், தன்னார்வலர்களுக்கு இதுவரை ஊதியம் வரவில்லை என்றால் ITK செயலியில் பதிவேற்றம் செய்ய வேண்டும், மூன்றாம் கட்ட பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும், ஒவ்வொரு மாதமும் நடைபெறும் பள்ளி மேலாண்மைக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் ஆலோசனை வழங்கினார், மாணவர்களின் அன்றாட நிகழ்வுகளை இல்லம் தேடி கல்வி செயலியில் பதிவேற்றம் செய்ய வேண்டும் எனவும் கூறினார்.

மாணவர்கள் கதை, விளையாட்டு, பாடல்கள் மற்றும் எளிய அறிவியல் செயல்பாடுகள் மூலம் கற்று வருவது பெற்றோர்கள் மத்தியில் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது.

## அனக்காவூர் ஒன்றியம் ஆக்கூர் அரசு பள்ளியில்

# 101 மாணவர்களுக்கு மிதிவண்டி செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஒ.ஜோதி வழங்கினார்



செய்யாறு , செப்.14-

செய்யாறு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அனக்காவூர் ஒன்றியம் ஆக்கூர் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 101 மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஒ.ஜோதி துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

பிறகு பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை வைத்தார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் எஸ்.பார்வதி சீனிவாசன், அனக்காவூர் ஒன்றிய குழு தலைவர் திலகவதி ராஜ்குமார், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் முருகேசன், அனக்காவூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ரவிக்குமார், அனக்காவூர் ஒன்றிய குழு உறுப்பினர் வே.பாஸ்கர், ஆக்கூர் ஊராட்சி மன்ற தலைவர் மஞ்சுளா தாசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கே.ராஜவேல், தலைமையாசிரியர் பி.கே.பாஸ்கரன், ஆசிரியர் எம்.சதிஷ், கிளை கழக நிர்வாகிகள் என்.அசோகன், கோதண்டராமன், கே.பச்சையப்பன், பி.அன்பு நடத்துனர், ஜெ.முகேஷ், ஜி.சுரேஷ், எம்.குமார், மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# அரசுத்துறைகளில் அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் ஒருங்கிணைப்பு இல்லை

# முன்னாள் அமைச்சர்களின் வீடுகளில் ரிப்பீட்டட் சோதனை 50 லட்சம் பறிமுதல்





# இந்துக்கள் குறித்து திமுக எம்பி ராஜா மீண்டும் சர்ச்சை பேச்சு


சென்னை / புதுக்கோட்டை | 14.09.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சி. வி. வேலுப்பிள்ளை , இலங்கை மலையக எழுத்தாளர் (பி.1914) (இ.1984)



ராம் ஜெத்மலானி , இந்திய வழக்கறிஞர், அரசியல்வாதி (பி.1923) (இ.2019)



யூ. ஆர். ஜீவரத்தினம் , தமிழகத் திரைப்பட நடிகை, பாடகி (பி.1927) (இ.2000)



## இன்றைய நினைவு நாள்

வில்லியம் மெக்கின்லி , அமெரிக்காவின் 25-வது அரசுத்தலைவர் (பி.1845) (இ.1901)



கௌதம நீலாம்பரன் , தமிழக எழுத்தாளர் (பி.1948) (இ.2015)



இந்திக குணவர்தனா , இலங்கை இடதுசாரி அரசியல்வாதி (பி.1943) (இ.2015)



## இந்தி மொழி நாள்